1974 மார்ச் 29]

டாக்டர் ச. மு. பழனியப்பன் : பைனாப்பிள் பயிரிடுவதற்குக் கொடுக்கின்ற சலுகைகள் மற்ற பழவகைகள் பயிரிடுபவர்களுக்கும் கொடுக்கப் படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : வேறு எந்தப் பழத்தை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிறார்கள் என்று தெரிய வில்லை. குறிப்பிட்ட ஒரு பழவகையைப் பற்றிக் கேட்டால் பதில் சொல்ல லாம். வாழைப்பழத்தைப் பற்றி அவர்கள் கேட்பதாக இருந்தால், அதற்கு பாக்கேஜ் ஸ்கீம் என்று ஒன்று தென்னார்க்காடு, நெல்லை போன்ற மாவட்டங் களில் செயல்படுத்தப்படுகிறது. ஒரு குறிப்பிட்ட பழத்தைப்பற்றிக் கேட்டால் அதற்கு என்னென்ன சலுகைகள் உண்டு என்பதைத் தெரிவிக்கலாம்.

திருமதி த. ந. அனந்தநாயகி : பைனாப்பிள் ஒரு சத்துள்ள உணவு. வேலி ஓரங்களில் கூட இதைப் பயிரிடலாம் என்று சொல்கிறார்கள். இந்தப் பழ வகையைப் பயிரிடுவதற்கான ஊக்கத்தை அளிக்கின்ற வகையில் அவர்களுக்கு இன்சென்டிவ்ஸ் கொடுக்கப்படுமா? ஊக்க போனஸ் கொடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : இன்சென்டிவ்ஸ் கொடுக்க மாட்டோம் என்று சொல்லவில்லை. 1972-ம் ஆண்டில் இன்சென்டிவ்ஸ் கொடுக்கப்பட்டதா என்று கேட்டார்கள், இல்லை என்று சொன்னேன். இனிமேல் கொடுக்கப்படுமா என்று கேட்டிருந்தால் அதற்குப் பதில் சொல்லியிருப்பேன். பைனாப்பிள் பயிர் செய்வதாக இருந்தால் கன்றுகள் வழங்க ஏற்பாடுகள் செய்கிறோம். ஒரு ஏக்கர் நிலத்திற்கு 300 ரூபாய் கடனுதவி செய்கிறோம். பைனாப்பிள் பலன் தருவதற்கு 18 மாதங்கள் ஆகும். அதன்பின் 4 வருடங்கள் பலன் தரும். ஆகவே 18 மாதங்களுக்குப் பின் கடனை வசூல் செய்ய ஏற்பாடு செய்கிறோம்.

கல்லார் பழ ஆராய்ச்சி நிலையம்.

*677 வினா—திரு. மே. சி. தூயமணி : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) மேட்டுப்பாளையம் தொகுதி, கல்லார் பழ ஆராய்ச்சி நிலையத்தை விரிவுபடுத்துதல் குறித்து, மேட்டுப்பாளையம் சட்டப்பேரவை உறுப்பினரிட மிருந்து அண்மையில் கோரிக்கை ஏதேனும் வந்துள்ளதா ?

(இ) ஆமெனில், அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :

(அ) ஆம்.

(இ) இக் கோரிக்கை அரசின் ஆய்வில் உள்ளது.

திரு. எம். தேவராசன் : தலைவரவர்களே, மேட்டுப்பாளையம் தொகுதி கல்லார் பழ ஆராய்ச்சி நிலையம் நல்ல தன்மை வாய்ந்தது. அது விரிவு படுத்தப்பட வேண்டுமென்று பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களே கூட கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள். ஆராய்ச்சி செய்வதற்கேற்ற நல்ல வசதிகள், சூழ்நிலைகள் அங்கே இருக்கின்றன. எனவே, ஆராய்ச்சியில் அதிக ஆர்வம் காட்டுகின்ற நம்முடைய அமைச்சரவர்கள் அந்த பழ ஆராய்ச்சி நிலையத்தை விரிவுபடுத்த முயற்சி எடுத்துக் கொள்வார்களா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, அந்தப் பழ ஆராய்ச்சி நிலையத்தை விரிவுபடுத்த வேண்டுமென்று பண்டித நேரு அவர்களே ஆர்வம் காட்டியிருப்பதாகச் சொன்னார்கள். தமிழ் நாட்டிலுள்ளவர்களும் அதில் ஆர்வம் காட்டுவார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் நானும் கூட ஆர்வம் காட்டுகிறோம். கல்லார் பழ ஆராய்ச்சி நிலையத்திற்குப் பக்கத்திலே இருக்கின்ற நிலம் பாரஸ்ட் இலாக்காவைச் சேர்ந்தது. அவர்களைக் கேட்டதில் பழ ஆராய்ச்சிக்கு விரிவுபடுத்துவதை விட தேக்கு மரம், அல்லது மூங்கில் மரம் இவைகளை நட்டால் வருமானம் அதிகமாகும் என்று சொல்லியிருக்கிறார்கள். இருந்தாலும் அதைப்பற்றி பேச்சுவார்த்தைகள் நடக்கின்றன.

ஐயாவையனாற்றின் கரையோரச் சாலை.

*678 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாயூரம் தாலுக்காவில் ஐயாவையனார் ஆற்றங்கரையில் எத்தனை மைல் நீளத்திற்கு கப்பிச்சாலை அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது ?

(இ) எந்த இடத்திலிருந்து எந்த இடம் முடிய ?

(உ) அதன் மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :

(அ) 7 கிலோ மீட்டர்.

(இ) காளி என்ற கிராமத்தையும், கொண்டல் கிராமத்தையும் இணைக்கிறது.

(உ) ரூ. 4·81 இலட்சம்

Price of sun-flower seeds.

*679 *Q.*—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether there is any proposals to fix the price of the sun flower seeds ; and

(*b*) if so, the details of the same ?